# <u>பத்மனாபபுரம் நகராட்சி</u>

## <u>அக்டோபர் 2018–ம் மாதத்திற்கான நகர் மன்ற அவசர கூட்டப் பொருட்கள் விபரம் .</u>

**1)** தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் **2018–2019–** ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான **மானியக்கோரிக்கை எண்.34, அறிவிப்பு எண்.14–** ல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக்குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி பத்மனாபபுரம் நகராட்சியில் உள்ள **21** வார்டுகளிலும் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் பொது கிணறு மற்றும் ஆழ்துளை கிணற்று நீரை ஆதாரமாகக்கொண்டு தீவிர வடி கட்டுதல் மற்றும் எதிர் சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்டு பொது மக்களுக்கு வழங்கும் வண்ணம் சுத்திகரிக்கும் இயந்திரம் நிறுவ ஏற்படும் செலவினத்தொகை ஒன்றுக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை **ரூ.18.00** இலட்சம் வீதம் மொத்தம் 21 வார்டுகளுக்கும் **ரூ.378.00** இலட்சம் ஆகும்.

இத்திட்டத்தை நிறைவேற்ற மூலதன செலவினத்தை தனியார் தொழில் நிறுவனம் / தொழில் முனைவோர்கள் **CSR** மற்றும் இதர தொகையில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், இயக்குதல் பராமரித்தல் செலவினத்தை பயனாளிகளிடம் இருந்து பெறப்படும் கட்டணத்தில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், மின் கட்டணத்தை தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் செலுத்தவும், நகராட்சி மூலம் இடம் மற்றும் நீர் ஆதாரம் மட்டும் வழங்க திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே நகரில் உள்ள அனைத்து வார்டுகளிலும் வார்டு **1–**க்கு ஒன்று வீதம் தானியங்கும் குடிநீர் மையங்கள் **( Automatic Water Vending Centers )** தனியார் தொழில் நிறுவனங்கள்/தொழில் முனைவோர்கள் **CSR** மற்றும் இதர தொகையில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், மேலும் அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொரீல் நுட்ப நுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக , அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் Expression of Interest விளம்பரம் செய்து தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்யவும் அனைத்து வார்டுகளிலும் செயல்படுத்தவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1630/2018)**
**மன்றத் தீர்மானம் எண்.1375**
**அங்கீகரிக்கப்பட்டது.**

ஒப்பம்/–(எஸ். மூர்த்தி)
தனி அலுவலர் (ம)ஆணையாளர்
பத்மனாபபுரம் நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.